2002 ஏப்ரல் 29]

அந்தக் கிராமத்தில் அந்த ஊரில் அவர் இருப்பதில்லை, கடன் திரும்பச் செலுத்துவதில்லை என்கிற தவறான கண்ணோட்டத்தின் காரணமாக — வங்கிகளில் கடன் இப்பொழுது கொடுப்பதற்கு தாமதமாகியும், மறுக்கப்பட்டும் வருகிறது. இவற்றையெல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் நேர்மையான முறையில் உரிய பயனாளிகளுக்குக் கடன் வழங்கி அவர்கள் பயன் பெற வேண்டுமென்கிற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் வங்கிகள் ஆலோசனைக் கூட்டத்தை கூட்டவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 255, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

255—

பேருந்து இயக்குதல்

***4895—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தோரணமலை அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இயக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தோரணமலை அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்குப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, தோரணமலை அருள்மிகு முருகன் திருக்கோயில் மிகவும் புகழ்பெற்றதால், அங்கு பக்தர்கள் அதிக அளவில் வருகின்றனர்.

இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்கேற்ப, வருங்காலத்தில் புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில் தோரணமலை என்ற ஊர், அம்பாசமுத்திரம்—தென்காசி பிரதான சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அங்கு அமைந்துள்ள அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்கு திருவிழாக் காலங்களில் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மற்ற நாட்களில் போதுமான பயணிகள் இல்லாது இருந்ததால், நிரந்தரப் பேருந்து வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை. தற்போது திருக்கோயிலுக்கு தனியார் சிற்றுந்து ஒன்றின் மூலம் 14 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே அரசு போக்குவரத்துக் கழகம் மூலம், மேலும் தோரணமலைக்குப் பேருந்து எதுவும் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். சக்திவேல் முருகன்.

திரு. எம். சக்திவேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோரணமலை முருகன் கோயில் என்பது எனது தொகுதியின் முடிவிலும், தென்காசி தொகுதியின் ஆரம்பத்திலும் இருக்கிறது. இந்த தோரணமலை முருகன் கோயிலுக்கு அருகில் இராம நதி அணை ஒன்று உள்ளது. இந்த இராம நதி அணையை ஒட்டி ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் உள்ளன. அந்த விளைநிலங்களுக்கு மேட்டூர், வாய்க்கால்பட்டி போன்ற பல பகுதிகளிலுள்ள தாய்மார்கள் மினி பஸ் மூலம் தினசரி சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த மினி பஸ் காணாவூர் வரை செல்கிறது. அதிலிருந்து 1 கி.மீ., 2 கி.மீ. தூரம் போனால் இந்த தோரணமலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் திருவிழாக் காலங்களில் நமது அரசாங்கத்தின் மூலம் சிறப்புப் பேருந்துகளை விட்டாலும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முருகன் கோயிலுக்கு ஒரு கி.மீ. நடந்து போகவேண்டியதுதானே? (சிரிப்பு)

2002 ஏப்ரல் 29]

திரு. எம். சக்திவேல் முருகன்: ஏற்கெனவே மலையிலிருந்து 5 கி.மீ. நடக்க வேண்டியிருக்கிறது. மலை உச்சியில் இருக்கிறது. அங்குள்ள படிக்கட்டில் ஏறுவதற்கே ஒன்றரை மணி நேரம், இரண்டு மணி நேரம் ஆகும். நடந்து செல்வது என்பது உடலுக்கு நன்மையாக இருந்தாலும், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தினசரி அந்தப் பகுதிகளுக்குச் செல்லவேண்டியிருப்பதால் அந்த மினி பஸ்ஸை இராம நதி அணை வரைக்கும், தோரணமலை கோயில் அடிவாரம் வரைக்கும் extend செய்து கொடுத்தாலே பல்வேறு வகையில் அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் என்பதால் நம்முடைய அருமை அண்ணாச்சி அவர்கள் கேட்ட கேள்வியில் என்னையும் இணைத்துக்கொண்டு எங்கள் பகுதியும் பயன்படுகிற வகையில் இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்து தருவதற்குப் பணிவோடு கேட்டு, செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த தோரணமலை கோயிலுக்குத் தனியார் சிற்றுந்து ஒன்று சென்று வருகிறது. ஆனால் ஒரே ஒரு கி.மீ. தூரத்திற்கு மட்டும் அந்த சிற்றுந்து வசதியை நீட்டித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுப்படையாக சிற்றுந்துகளுக்கு இப்போது ஓடிக்கொண்டிருக்கிற வழித்தடங்களிலிருந்து கூடுதலாக நீட்டித்துத் தருவதற்கு இன்னும் அரசு கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டியுள்ளது. ஆகவே கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதால், மாண்புமிகு இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இதற்கு அனுமதி பெற்று, சிற்றுந்துக்கு கால நீட்டிப்பு, Route நீட்டிப்பு, அதாவது extension செய்து கொடுப்பதுபற்றி முடிவு எடுக்கும்போது இதைப் பற்றியும் சிந்திப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவரைக்கும் நடராஜா பஸ்ஸில் ஒரு கி.மீ. செல்லுங்கள். (சிரிப்பு)

வினா எண் 256, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு மின் துறை அமைச்சர்.